**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>M.C.O.P.No.48/2023</u>**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | ராஜகாந்தம் |
| தகப்பனார் / கணவர் | .. | ஓசூரான் |
| வயது | .. | 70 |
| தொழில் | .. | விவசாயம் |
| கிராமம் | .. | புரிசை மதுரா கீழ்மேடு |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கள்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.த.சா.ஆ.1, பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல் ம.த.சா.ஆ.2, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு புத்தகம் நகல் ம.த.சா.ஆ.3, விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பாலிசி நகல் ம.த.சா.ஆ.4, விபத்து ஏற்படுத்திய வாகன ஓட்டுநர் உரிமம் நகல் ம.த.சா.ஆ.5, பெருமாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.6, பெருமாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் நகல் ம.த.சா.ஆ.7, பெருமாள் என்பவரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.த.சா.ஆ.8, TN 97 Y 7107 என்ற வாகனத்தின் பதிவு சான்று நகல் ம.த.சா.ஆ.9 ஆகும்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**